## எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி

RCOP. No: 36/2023 Date : 23-08-2025

பெயர் : ஜீலியட் மெட்டில்டா மேரி எ.ம.சா 2

| | |
|---|---|
| எ ம சா ஆ 7 | ஜீலியட் மெட்டில்டா மேரி என்பவர் வாக்காளர் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| எ ம சா ஆ 8 | ஜீலியட் மெட்டில்டா மேரி என்பவர் வங்கி கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| எ ம சா ஆ 9 | ஜீலியட் மெட்டில்டா மேரி என்பவர் எரிவாயு இணைப்பு நுகர்வோர் புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| எ ம சா ஆ 10 | ஜீலியட் மெட்டில்டா மேரி என்பவர் குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| எ ம சா ஆ 11 | ஜீலியட் மெட்டில்டா மேரி என்பவர் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

## மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இவ் வழக்கில் நான் தரப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. இவ் வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனது மாமா என்றால் சரிதான் அவர் அழைத்ததின் பேரில் இவ்வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2000ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது இவ்வழக்கு முதலில் எந்த நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் ஆலந்தூர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதன் வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கோரி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் மனுசொத்தில் உள்ள வீடு வாடகை வீடு என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் ஆனால் அந்த வீட்டில் நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம்.

2. மனு சொத்து மனுதாரர் டோமினிக்ஸ் ஏவியர் என்பவருக்கு சொந்தமானது என ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும் அவர் எனது அண்ணன் தான். எதிர்மனுதாரர் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை, அவர் வேலை பார்த்து வந்த நிறுவனத்தின் அட்டை ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் பழனி தாவாசத்திற்கு அவரது பெயரில் ஏதேனும் உரிமை மூலம் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்திருப்பார். இவ் வழக்கில் எதிர்மனுதாரர் என்னென்ன இடைக்கால பரிகாரம் கூறி மனு தாக்கல் செய்திருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இடையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3.எனது அண்ணன் எப்போது இறந்தார் என்றால் 2013 ஆம் ஆண்டு இருந்தார். தேதி மாதம் தெரியுமா என்றால் ஜனவரி மாதம் 13–ஆம் தேதி இறந்தார். எனது அண்ணன் வேலைக்கு சென்ற காலத்தில் எனக்கு இரண்டு, மூன்று வயது இருக்கும் என்றால் சரிதான். எனது அண்ணன் வேலைக்கு சென்ற காலத்தில் நான் சிறுமையாக இருந்த நிலையில் அவர் வேலைக்கு சேர்வதற்கு அனுமதி கொடுத்ததாக நான் நிறுவன வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிறுவன வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது மாமா சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை நான் தான் சொன்னேன். அந்த விபரத்தை எங்கு சொன்னீர்கள் என்றால் ஜெராக்ஸ் கடையில் வைத்து சொன்னேன். எந்த கடையில் வைத்து சொன்னீர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4.நான் நிறுவன வாக்குமூலத்தில் ரூபாய் 90 ஆயிரம் எனது அண்ணனுக்கு மனு சொத்தை வாங்குவதற்காக கொடுத்ததாக குறிப்பிட்ட நிலையில் அது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்குறிப்பிட்டவாறு நான் தொகை கொடுத்தது தொடர்பாக எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சம்பாதித்த தொகையை எனது அண்ணனிடம் கொடுத்து மனுசத்தை வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது தொடர்பாக எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2003 ஆம் ஆண்டு நடைபெற்றது.எனது கணவரின் வீடு எங்கு அமைந்துள்ளது என்றால் கீழ்கட்டளையில் அமர்ந்துள்ளது திருமணம் நடைபெற்று எனது கணவர் வீட்டிற்கு சென்று விட்டன என்றால் ஆமாம். எனது சகோதரி வயலட் மேரி என்பவருக்கு பாலாஜி நகரில் வீடு உள்ளது என்றால் சரிதான் அவருக்கு

திருமணம் நடைபெற்ற அந்த வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரிதான். பாலாஜி நகரில் உள்ள எனது அக்கா வீட்டில் நான் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் இல்லை எனது அக்கா வீட்டில் நான் வாடகைக்காக குடியிருந்து வந்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6.மனுதாரர் தனது சுய வருவாய் கொண்டு மனுசொத்தை தன் பெயரில் கிரயம் வாங்கி உள்ளார் என்றாலும் அச்சொத்தில் எதிர் மனுதாரர் வாடகைக்கு தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. மனுசொத்தில் எதிர்மனுதாரருக்கும் அல்லது எனக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் ஒரு நபர் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டிற்கு வழங்கப்படும் ஆவணம் என்றாலும் அந்த ஆவணம் மூலம் எவ்வித உரிமையும் மனுசொத்தில் கோர முடியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்கு ஆதரவாக இருந்து வருவதால் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக வழக்கில் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுபடி மனுதாரர் தீர்ப்பானை பெறத் தகுதியானவர் என்றால் சரியல்ல

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது)**

**மறு விசாரணை இல்லை**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram